Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 90/2022** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW4** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சிங்கத்துரை |
| Father/Husband Name | : | கருப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.01.2024

<u>(எதிரி ஆஜர்.)</u>

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் கருவேப்பில்லை காரத் தெருவில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்த ராஜா என் சின்னம்மா பையன். அவரும் கொத்தனார் வேலை தான் பார்த்து வந்தார். ஆஜர் எதிரி சரவணனை தெரியும். கடந்த 19.08.2019 ம் தேதி எனது சின்னம்மா மீனாட்சிக்கு ரவிந்திரன் என்பவர் போன் மூலம் தொடர்பு கொண்டு ஆஜர் எதிரி சரவணன் ராஜாவை கத்தியால் குத்திவிட்டதாக தகவல் சொன்னார். காயம்பட்ட ராஜாவை ரவிந்திரன்

ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார். மீனாட்சி எனக்கு தகவல் கொடுத்ததன் பேரில் நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அப்போது ராஜா குத்துப்பட்டு இரத்தக்காயத்துடன் கிடந்தார். மருத்துவர்கள் அவரை பரிசோதித்து விட்டு காயம் அதிகமாக இருப்பதால் மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக பரிந்துரைத்தனர். நானும் உடன் சென்றேன். அதன் பிறகு ராஜா 5 நாட்கள் சிகிச்சையில் இருந்து மதுரை இராஜாஜி மருத்துவமனையிலேயே இறந்துவிட்டார். ராஜாவும், சரவணனும் கொத்தனார் வேலை பார்த்து நல்ல முறையில் தான் பழகி வந்தனர். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>குறுக்கு விசாரணை</u> – இல்லை.